இயேசு தனது மரணத்திற்கு

சீஷர்களை

# ஆயத்தம் பண்ணுதல்



# இயேசு எவ்வாறு தம்முடைய சீஷர்களை தனது மரணத்திற்கு ஆயத்தம் பண்ணினார்?

*Christian Questions என்னும் வலையொலியில், மார்ச் 29, 2021 அன்று ஒலிப்பரப்பப்பட்ட நிகழ்வு #1171 – இன் தமிழாக்கம்*

*தொகுப்பாளர்: சகோ. ரிக் மற்றும் ஜூலி அவர்கள்*

**Copyright :**

***Christian Questions.com***

**Tamil Version :**

***www.foodfornewcreature.com***

***யோவான் 16:33 : என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்.***

*நீங்கள் நாளை மரிக்க போகிறீர்கள் என்று உங்களுக்கு தெரிந்திருந்தால், இன்றைய தினத்தை எப்படியாக நீங்கள் செலவிடுவீர்கள்/கழிப்பீர்கள்? இயேசு இந்த தீவிரமான கேள்வியையே 2000 வருடங்களுக்கு முன்பு எதிர்கொண்டார். அவருடைய பதில் வெளிப்படையாகவும் /தெளிவாகவும் இருந்தது. அவர் அந்த மாலை பொழுது முழுவதையும் தன்னுடன் நெருக்கமாக இருந்தவர்களுடன் செலவிட்டார். அவர், அவர்களை ஆயத்தப்படுத்தி, போதித்து உற்சாகப்படுத்தினார், ஏனென்றால் இனி நடக்கவிருக்கும் காரியங்கள் அவர்களுக்கு அதிர்ச்சியாகவும், திகிலூட்டும்படியாகவும் இருக்கபோகிறது. சீஷர்களின் உலகம் சிதைந்துவிடும், மேலும் அவர்களின் அபூரண மனம் அவர்களை அனுமதிக்கும் அளவுக்கு அவர்கள் தயாராக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். அன்றிரவு அவர் தனது வார்த்தைகளாலும், கிரியைகளாலும் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தது அசாதாரணமானது. நம் கர்த்தர் இயேசுவின் கருணை, ஞானம், அன்பு, தெளிவு ஆகியவற்றின் ஆழத்தை நம்முடைய கரங்களில் பெறுவது சாத்தியமல்லவென்றாலும், எப்படியாயினும் முயற்சிப்போம். நாம் தூய்மையான ஆவிக்குரிய உத்வேகத்தை பெற்றுக்கொள்வோம்.*

*நாம் யோவான் 13 ஆம் அதிகாரம் தொடங்கி யோவான் 16 ஆம் அதிகாரம் வரை உள்ளவற்றில் இயேசு கிறிஸ்து கொடுத்திட்ட பாடங்களையும் வழிகாட்டுதலையும் சுருக்கமாக காண்போம். யோவான் 13-ஆம் அதிகாரம் நம்முடைய ஆண்டவர் இயேசுவும் அவருயை சீஷர்களும் மேல்வீட்டரையில் இருப்பதிலிருந்தது தொடர்கிறது. இயேசு சீஷர்களை ஆயத்தப்படுத்த வகுத்திட்ட கருப்பொருள்களை நாம் இப்போது கருத்தில்கொள்வோம்.*

## *1.ஆயத்தத்திற்கான கருப்பொருள்:-*
## *சத்தியத்தை அறிதல்*

***யோவான் 13:1-2 : பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார். சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு, அவர்கள் போஜனம்பண்ணிக்கொண்டிருக்கையில்;***

- *இயேசு தம்முடைய வேளை வந்ததென்று அறிந்திருந்தார், மேலும் அவர் பிதாவிடம் திரும்பிச் செல்வதையும் அறிந்திருந்தார்(KNEW).*
- *இயேசு தம்முடைய சீஷர்களில் அன்புகூர்ந்தார், (LOVED) அந்த அன்பை அவர்களுக்கான இறுதி கவனிப்பில் வெளிப்படுத்தினார்.*
- *இயேசு சிலுவையில் அறையப்படுவதின் கூறுகளைப் புரிந்துகொண்டிருந்தார் (UNDERSTOOD), மேலும் அவரை காட்டிக் கொடுப்பவனையும் அவர் விரைவில் எதிர் கொள்வார்.*




**தாம் உயிர்த்தெழுந்த பிறகு பிதாவிடம் செல்வார் என்பதை இயேசு எவ்வாறு அறிந்திருந்தார்?**




*" **இயேசு தேவனுடைய திட்டத்தை புரிந்துக் கொண்டிருந்தார்.**" அவர் உண்மையுள்ளவராக இருந்தார் என்றும், அவருடைய வேளை வந்தது என்றும், மேலும் அவர் பிதாவினிடம் திரும்பும்படியாக இந்த உலகை விட்டு வெளியேறுவார் என்றும் அறிந்திருந்தார். சிலுவையின் கடைசி*

தருணம் வரை அவர் தனது பிதாவிடம் நிலையான தொடர்பைக் கொண்டிருந்தார் என்று நாம் கருதுகிறோம்.




***மனுகுலத்தை மீட்கும் நியமத்தை இயேசு கிறிஸ்து ஏற்றுக்கொண்டு பூமிக்கு வந்த காரியமானது, மரணம் ஒரு தற்காலிகமானது என்றும், பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவது உறுதியென்றும் அறிந்திருப்பாரெனில் அது தியாகபலியாக கருதப்படுமா?***




அவர் இன்னும் தன்னை உண்மையுள்ளவராக நிரூபிக்க வேண்டியிருந்தது. ***(எபிரெயர் 5:8-ல் சொல்லியிருக்கிறப்படி "அவர் குமாரனாயிருந்தம் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்***டு,") அவர் சோதிக்கப்பட்டாக வேண்டும், ஆனால் ஒரு குறிப்பிட்ட புள்ளியில் சோதனை நிறைவடையும் போது அவர் உறுதியாகப்பட்டார்.

ஒரு நிகழ்வுக்கு தயாராகும் உலகின் சிறந்த விளையாட்டு வீரர்கள் பற்றி சிந்தியுங்கள். அவர்களுக்கு அசாதாரண ஆயத்தம் மற்றும் ஒழுக்கம் தேவை. அவர்கள் போட்டியிட தயாராக உள்ளனர்; அவர்களின் வெற்றிக்கான வாய்ப்பு மிகவும் நன்றாக இருந்தால் அது எப்படி, தியாகமாக இருக்கும்? ஏனெனில் அவர்கள் அந்த நிலையை அடைவதற்கு அனைத்தையும் இழக்க வேண்டியிருக்கும். இப்படியாகவே நாம் இயேசுவை பார்க்க வேண்டும். இந்நிலையில் அவருடைய கீழ்ப்படிதல் முன்னறிந்த தீர்மானமாய் இருந்தபோதும், அவருடைய உண்மைத்தன்மையின் ஆழத்தை நாம் புரிந்துகொள்ள இந்த கடைசி சோதனைகளை அவர் கடந்து செல்ல வேண்டியிருந்தது.



*ஒலிம்பிக் நீச்சல் வீரர் மைக்கேல் பெல்ப்ஸ் பயிற்சி பெற்றபோது, அவரும் அவரது பயிற்சியாளரும் எந்தவொரு பந்தயத்திலும் தவறக்கூடிய ஒவ்வொரு காட்சியையும் கவனிக்க முயன்றனர், அதனால் எதுவும் அவரை ஆச்சரியத்தில் வீழ்த்தாது என்பதற்காக அவர்கள் ஒவ்வொரு சாத்தியத்திற்கும் ஒவ்வொரு திட்டத்தை வகுத்தனர்.*

## *2. ஆயத்தத்திற்கான கருப்பொருள்:- ஊழியக்காரனாக இருத்தல்*

***யோவான் 13:3-5 : தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து; போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்.***

*பரிசேயர்களுடனான அவர்களின் அனுபவத்திலிருந்து இது எவ்வளவு வித்தியாசமான தாழ்மையாக இருந்திருக்கும்! இதுவே படிநிலையின் அடிப்படையான கருத்தாகும்.*

*தாம் பிதாவிடம் திரும்பி செல்வதை இயேசு அறிந்திருந்ததினால், அவர் தனது மாம்ச பிரசன்னம் இல்லாமல் செயல்படகூடிய கிறிஸ்துவத்தை தயார்படுத்தும் செயல்முறையைத் தொடங்கினார். அவருடைய போதனைகள் மற்றும் எடுத்துக்காட்டுகள் அனைத்தும் அப்போஸ்தலர்களின் புதிய விசுவாசத்திற்கான அடித்தளத்தைக் காட்டுவதாக இருந்தன. இது கால்களை கழுவும் போது வெளிப்பட்ட பணிவுடன்/ தாழ்மை தொடங்கியது.*

- அவர்களுக்கு வரவிருக்கும் தலைமைத்துவத்திற்கான பங்கு மிகுந்த தாழ்மையுடன்/ பணிவுடன் நிறுவப்படவேண்டும் என்ற பாடம் அவர்களுக்குத் தேவைப்பட்டது.



- தங்கள் ஆண்டவரும். எஜமானும் பணிவுடன் மண்டியிட்டு கால்களைக் கழுவிய உதாரணத்தை அவர்கள் எப்போதும் நினைவில் வைத்திருப்பார்கள்.

- பரஸ்பர சேவை என்பது அவர்கள் ஒவ்வொருவரும் முதலில் சேவை செய்ய தொடங்குவதில்/முன்வருவதில் இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

- இயேசு யூதாஸ் உடைய கால்களையும் மேலும் அங்கு உண்மையுள்ளவர்களாய் இருந்தவர்களின் கால்களையும் கழுவுவதை அவர்கள் கவனிக்க வேண்டியிருந்தது.




**சீஷர்களின் பாதங்களைக் கழுவிய பிறகு யாராவது இயேசுவின் பாதங்களைக் கழுவினார்களா?**

இப்படியாக இருக்க வாய்ப்பில்லை, ஏனென்றால் இப்படியிருந்தால் ஒருவேளை எழுதப்பட்டிருக்கும். மேலும், இயேசு அவர்களின் கால்களைக் கழுவி முடித்ததும், அவர்களுக்கு, போதிக்க தொடங்கினார். ஒருவேளை அவர்கள் பின்பு இவற்றை நினைவுகூறுகையில் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை என்று வருந்தியிருக்கலாம்.




## *3. ஆயத்தத்திற்கான கருப்பொருள்:- உண்மை அறிதல் - அதன் இருளையும் அதன் ஒளியையும் அறிதல்.*

***யோவான் 13:18-19,21 : உங்களெல்லாரையுங்குறித்து நான் பேசவில்லை, நான் தெரிந்துகொண்டவர்களை அறிவேன்; ஆகிலும் வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான். அது நடக்கும்போது நானே அவரென்று நீங்கள் விசுவாசிக்கும்பொருட்டு, இப்பொழுது அது நடப்பதற்கு முன்னமே அதை உங்களுக்குச் சொல்லுகிறேன். இயேசு இவைகளைச் சொன்னபின்பு, ஆவியிலே கலங்கி: உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சாட்சியாகச் சொன்னார்.***

அவர் சொன்ன அனைத்தையும் முழுமையாகப் புரிந்துக் கொள்ள அவருடைய சீஷர்களுக்கு இன்னும் பரிசுத்த ஆவி அருளப்படவில்லை, ஆனால் முழு யுகத்திற்கான சுவிசேஷ செய்தியின் பாடங்கள் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. இவை நம் அனைவருக்கும்கூட பாடமாகும்.

துரோகம் செய்ததற்கான எந்த ஆதாரமும்

*வெளிப்படுவதற்கு முன்பே, அவர்கள் மத்தியில் ஒரு துரோகி இருப்பதை இயேசு தைரியமாக வெளிப்படுத்துகிறார். இப்படி செய்வதன் மூலம், அநேக காரியங்கள் நடப்பதற்கு முன்னரே தமக்கு அவைகள் தெரியும் என்பதை இயேசு அப்போஸ்தலர்களுக்குத் தெரியப்படுத்தினார். இது அவருடைய மேசியாதுவத்தின் மீது விசுவாசத்தை ஊட்டவும், மிக விரைவில் அவர்கள் எதிர்கொள்ளும் நிகழ்வுகளுக்கு ஆறுதலளிக்கவுமே ஆகும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால்: நீங்கள் திரும்பிப் பார்க்கையில், இவைகளை நினைக்கையில் இவை அனைத்தும் உண்மை என்றும் தேவனுடைய திட்டத்தின்படி நடப்பதை நீங்கள் உணர என்னால் முடிந்த அனைத்து ஆயத்தங்களையும் நான் உங்களுக்கு வழங்குகிறேன்.*

***யோவான் 13:26-27 : இயேசு பிரதியுத்தரமாக: நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன்தான் என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார். அந்தத் துணிக்கையை அவன் வாங்கினபின்பு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்றார்.***

*"யூதாஸ் வெளியேறியதற்கு இயேசுவின் உடனடியான பதில் மாம்சீக கண்ணோட்டத்தில் ஆச்சரியமாக இருக்கிறது ஆனால் ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் சக்தி வாய்ந்தது":*



***யோவான் 13:31-33 : அவன் புறப்பட்டுப்போனபின்பு இயேசு: இப்பொழுது மனுஷகுமாரன் மகிமைப்படுகிறார், தேவனும் அவரில் மகிமைப்படுகிறார்.***




***இந்த துரோகத்தால் இயேசுவும் பரலோக பிதாவும் எவ்வாறு மகிமைப்படுத்தப்படுகிறார்கள் ?***




*தேவனுடைய திட்டம் நிறைவேறுவதால் அவர்கள் மகிமைப்படுத்தப்படுகிறார்கள். அவர் திட்டத்தில் தீமையின் அனுமதி உள்ளது, அது இறுதியில் முடிவடையும், மேலும் நீதி பூமியில் வாசமாயிருக்கும் மற்றும் தேவனும் மகிமைப்படுத்தப்படுவார். இயேசு அந்த திட்டத்தின் வழியில் குறுக்கிடவில்லை.*

***32.தேவன் அவரில் மகிமைப்பட்டிருந்தால், தேவன் அவரைத் தம்மில் மகிமைப்படுத்துவார், சீக்கிரமாய் அவரை மகிமைப்படுத்துவார். 33. பிள்ளைகளே, இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேகூட இருப்பேன்; நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; ஆனாலும் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக்கூடாதென்று நான் யூதரோடே சொன்னதுபோல இப்பொழுது உங்களோடும் சொல்லுகிறேன்.***

***துரோகி தன் தீய வேலையைச் செய்ய விட்டுவிடுவதால் தேவன் மகிமைப்படுவார்!***

*யூதாஸ் ஏன் இயேசுவைக் காட்டிக்கொடுத்தார் என்று வேதாகமம் வெளிப்படையாகக் கூறவில்லை, ஆனால் யூதாஸ் வெறும் பேராசை உடையவர் என்ற ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டிருந்தார். யோவான் 12:6 குறிப்பாக அவன் அப்போஸ்தலர்களின் பணப்பையிலிருந்து திருடிய ஒரு திருடன் என்று கூறுகிறது. ஒருவேளை அவர் இயேசுவை அற்புதங்களை வெளிப்படுத்தும் ஒரு காட்சியாளராக நினைத்திருக்க வேண்டும், அவரின் (இயேசு) அற்புதங்களுக்கு பணம் வசூலிக்கிறவராக வேண்டும் என்று விரும்பி இருக்கலாம். இந்த இறுதி போஜனத்தில் யூதாஸ் மீது சாத்தான் எப்படி தீய செல்வாக்கை*

*செலுத்தினான் என்பதை நாம் முன்பே வாசித்தோம், ஆனால் அதற்கு முன்புவரை அவரை ஒரு மோசமான நபராக கணக்கில் கொள்ளமுடியாது, யூதாஸ் தேவனுடைய ராஜ்யத்தை விரைவில் கொண்டுவர முயற்சித்திருக்கலாம் என்று சிலர் கூறுகிறார்கள். இயேசுவை அதிகாரிகளிடம் ஒப்படைப்பதன் மூலம் இயேசு தன்னை ராஜாவாக அறிவித்து ரோம அரசாங்கத்தை கவிழ்ப்பார் என்று யூதாஸ் கற்பனை செய்திருக்கலாம். அது அவருக்கு அதிக மதிப்பைக் கொடுத்திருக்கலாம். யூதாஸின் இருதயத்தில் அவமரியாதை இருந்தது.*

## *4. ஆயத்தத்திற்கான கருப்பொருள்:- ஆர்வமும் நல்ல நோக்கமும் உள்ளவர்களுக்கு யதார்த்தத்தை உண்மையாக வைத்திருங்கள்*

***யோவான் 13:36-38 : சீமோன்பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் போகிற இடத்துக்கு இப்பொழுது நீ என் பின்னே வரக்கூடாது, பிற்பாடு என் பின்னே வருவாய் என்றார். பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே, நான் இப்பொழுது உமக்குப் பின்னே ஏன் வரக்கூடாது? உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: எனக்காக உன் ஜீவனைக் கொடுப்பாயோ? சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாயென்று, மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.***

*இயேசுவும், பேதுருவிடம் அவருடைய உண்மைத்தன்மையையும் அவர் மீண்டும் தன்னோடு இருப்பார் என்பதையும் கூறுகிறார்.*

***...ஆனால் பிற்பாடு என் பின்னே வருவாய்*** *- பேதுரு தாமே இந்த காரியங்களை அறியாத போதும் அவர் உண்மையுள்ளவராய் இருப்பார் என்பதை இயேசு அறிந்திருந்தார். இது பேதுருவுக்கு நம்பிக்கையை தந்திருக்கும்.*

*நாம் தாழ்மையாக இருக்கவும், ஊழியம் செய்யவுமே அழைக்கப்பட்டிருக்கிறோம். மேலும் நாம் மனுக்குலம் இதுவரை கண்டிராத மாபெரும் தலைவரையே பின்பற்றுகிறோம்.*

***தாழ்மை இப்போது சீராக உள்ளது, மேலும் துரோகம் மற்றும் மறுதலிப்பு இரண்டுமே வெளிப்பட்டது. இயேசு அடுத்து என்ன கற்பிக்கப்போகிறார்?***

*இயேசு என்ன சொல்கிறார் என்பதை அவருடைய சீஷர்கள் உண்மையில் புரிந்து கொள்ளவில்லை என்றாலும், அவர் இப்போது அவர்களுக்கு ஒரு பலமான ஊக்கத்தை கொடுக்கிறார். கற்பிக்க அநேக காரியங்கள் இருப்பினும் மிகவும் விலைமதிப்பற்ற குறைந்த நேரம் மட்டுமே அவரிடம் உள்ளது. யோவான்-14 ஆம் அதிகாரம் அமைதியாக இருப்பது, கீழ்ப்படிதல் மற்றும் உதவி பெறுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.*

## *5. ஆயத்தத்திற்கான கருப்பொருள்:- கலங்காதிருங்கள்; ஏனென்றால், எதிர்காலம் உங்கள் கிரகிக்கும் திறனுக்கு அப்பாற்பட்டது.*

***யோவான் 14:1-3 : உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.***

***தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்; என்னிடத்தில் விசுவாசமாயிருங்கள்*** - *அப்போஸ்தலர்கள் ஏற்கனவே தேவனிடத்தில் விசுவாசமாயிருந்தனர்.*

***யோவான் 17:6 : நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள்.***

*...ஆனால் வாக்களிக்கப்பட்ட மேசியா இவர்தானா? அவர்கள் ஏமாற்றப்பட்டார்களா? அவர்கள் இயேசுவின் வார்த்தைகள் மற்றும் கிரியைகளின் அடிப்படையில் தவறான எதிர்ப்பார்ப்புகளை கட்டினார்களா? மூன்றரை வருட ஊழியத்திற்குப் பிறகு, அவருடைய எதிரிகள் அவரைக் கொன்றுவிடுவார்கள், வாக்குறுதியளிக்கப்பட்ட இராஜ்யம் நிறுவப்படப்போவதில்லை, இது எப்படி சாத்தியம்?*

*இவைகளெல்லாம் சர்வவல்லமையுள்ள தேவனுடைய திட்டம் என்றும், இயேசு அவருடைய திட்டத்திற்கு உண்மையாக இருந்தார் என்பதையும், அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது.*

*அந்த நேரத்தில் அவர்களால் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும், இயேசு அவர்களின் நம்பிக்கையை வளர்த்து, அவர்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் செய்கிறேன் என்று அவர்களிடம் கூறினார்.*

*பிதாவுக்கும் தனக்கும் உள்ள ஐக்கியத்தை இயேசு விளக்க தொடங்கினார், மற்றும் விரைவில் அப்போஸ்தலர்கள் (வருங்கால பின்னடியார்கள்) எவ்வாறு இவ்விருவருடனும் இணைந்திருப்பார்கள் என்பதை பற்றியும் விளக்கினார்.*

*நாம் ஒரு இருண்ட மற்றும் பலனற்ற மூலையில்/இடத்தில் இருந்தாலும், நமது எதிர்காலம் பிரகாசமாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கும் என்பதை வெளிகாட்ட முடியும்*

*என்பதில் மாபெரும் உத்தரவாதம் உள்ளது. இந்த பிரகாசமான எதிர்காலத்திற்கான திறவு கோல் "**விசுவாசமாகும்**." இயேசு தம்முடைய சீஷர்கள் தம்மை விசுவாசிக்கும்படி நினைப்பூட்டுகிறார். ஏனெனில் நாளைய தினத்தில் நடக்கப்போவது அவர்களை நிலை குலைய செய்து அதிரப்பண்ணும். அவர் நம்பிக்கை, சாதித்தல் மற்றும் தேவனுடைய சித்தம் ஆகிய விதைகளை அவர்களுக்குள் விதைத்து, அவர்கள் இவற்றை சமாளிக்க உதவ முயற்சிக்கிறார்.*

## *6. ஆயத்தத்திற்கான கருப்பொருள்:-*
## *பிதா மற்றும் இயேசுவின் மாறாத ஐக்கியம்*

***யோவான் 14:8-10 : பிலிப்பு அவரை நோக்கி: ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும் என்றான். அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படி சொல்லுகிறாய்? நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார்.***

*தேவனுக்கும் இயேசுவுக்கும் உள்ள ஐக்கியத்தை நாம் புரிந்துக்கொள்ள உதவுவதால், இந்த வார்த்தைகள் வல்லமையுள்ளவைகள்.*

*பிலிப்புவின் வேண்டுகோளுக்கு இயேசு எப்படி மென்மையாக பதிலளித்தார் என்பதை கவனிக்க வேண்டும்.*

**இயேசு பதிலளிக்கிறார் :**

- *நான் என் பிதாவின் தெளிவான பிரதிபலிப்பு - நீங்கள் என்னை பார்த்தால் அவரை புரிந்துக்கொள்ள முடியும்.*



- *நான் என் பிதாவின் சித்தத்தை செய்வதில் முற்றிலும். பின்னிப்பிணைந்திருப்பதால், நான் அவரை மிகவும் முழுமையாக பிரதிபலிக்கிறேன்.*

- *என் பிதாவின் செல்வாக்கே என் வார்த்தைகளையும் மற்றும் கிரியைகளையும் வழிநடத்துகிறது.*

*பின்னர்* **யோவான்** ***17:21-23****-ல், இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் ஒன்றாய் இருக்க வேண்டும் என்று ஜெபிப்பதின் மூலம் அந்த ஐக்கியத்தின் பாடத்தை நிறைவு செய்வார்.*

**அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.** *இதின் அர்த்தம் பின்பற்றுபவர்களும் பிதாவின் தெளிவான பிரதிபலிப்பாய் இருப்பார்கள் மற்றும் அவர்கள் தேவனோடும், இயேசுவோடும் ஐக்கியமாயிருப்பார்கள்.*

*இயேசுவின் இறுதிமுடிவை விளக்கும்போது:- என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு, அவைகளை நான் உங்களுக்காக ஆயத்தம் பண்ணுகிறேன். அவைகளை உங்களுக்காக ஆயத்தம்செய்வதையே என் வழக்கமாக கொண்டுள்ளேன். நீங்கள் கற்பனை செய்வதற்கும் மேலாக ஒரு அழைப்பு இருக்கபோகிறது. பிதாவுக்கும், எனக்கும்,*

*உண்மையான சீஷர்களுக்கும் இடையே ஒரு ஐக்கியம் இருக்கும்.*

*பிதாவுடனான அவரது ஐக்கியம் தெளிவாக தெரிந்தவுடன் இயேசு ஆவிக்குரிய ஆசிர்வாதங்களின் கதவை திறக்கிறார்.*

## *7. ஆயத்தத்திற்கான கருப்பொருள்:- அன்பான கீழ்ப்படிதல் மற்றும் இந்த பாதையில் உதவி செய்தல்.*

***யோவான் 14:14-17 : என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன். நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.***

*தன்னால் சாதாரணமாகச் செய்ய முடியாத காரியங்களைகூட செய்வதற்கும், ஆவிக்குரிய வழியில் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதற்கும் இயேசுவுக்குள் இந்த வல்லமை இருந்தது. தேவனின் செல்வாக்கும் வல்லமையும் தனக்குள் பெற்றிருந்த முதல் நபர் இயேசுவே. உண்மை சபையாக இயேசுவை பின்பற்றுபவர்களும் அந்த ஆவியை தங்களுக்குள் பெற்றுக்கொண்டுள்ளனர்.*

- *என் நாமத்தினாலே நீங்கள் எதை கேட்டாலும், அதை நான் செய்வேன் – அர்த்தமாவது உங்கள் உயர்ந்த ஆவிக்குரிய நலனுக்கானதை பெறுவீர்கள் எனவே சரியானதை கேளுங்கள்.*

- *செய்வதற்கான வேலை இருக்கிறது. என்னிடத்தில் உள்ள உங்கள் அன்பினிமித்தம் நான் கட்டளையிடுவதைக் செய்யுங்கள்.*

- *ஏனெனில் நான் உங்களை விட்டு செல்ல வேண்டும், தேவனுடைய வல்லமை மற்றும் செல்வாக்காகிய ஆவியை உங்களிடத்தில் அனுப்பும்படிக்கு நான் என் பிதாவிடம் உங்களுக்காக பரிந்துபேசுவேன்.*

*இயேசு தனிப்பட்ட முறையில் மற்றொரு உதவியாளரை நமக்காக கேட்டு பரிந்துரைத்தார். கடந்த 2000 வருடங்களாக நமது சிறந்த ஆவிக்குரிய நலன்களுக்காக இந்த ஐக்கியத்தை நாம் பெற்றுள்ளோம்.*

*நற்செய்தியானது காலங்கள் கடந்தாலும் பாதுகாக்கப்படும் என்று இயேசு அடுத்ததாக உறுதியளிக்கிறார். தேவனுடைய ஆவியில்லாமல் இதை நம்மால் அறியமுடியாது.*

***யோவான் 14:25-26 : நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன். என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.***



*பல வருடங்களுக்குப் பிறகு, அப்போஸ்தலர் யோவான் இயேசு அவர்களிடம் சொன்ன யாவற்றையும் எழுதினார். இவ்வளவு தெளிவாக நடந்தவற்றை எப்படி அவர் நினைவு கூர்ந்தார் அல்லது ஞாபகத்தில் வைத்திருந்தார்?*

*யோவான் தூங்கிக்கொண்டிருந்தாரெனில் கெத்செமனே தோட்டத்தில் இயேசு ஏறெடுத்த முழு ஜெபத்தையும் எப்படி அறிந்திருந்தார்? தேவனுடைய வல்லமை மற்றும் செல்வாக்கான பரிசுத்த ஆவியின் மூலமே யோவானுக்கு என்ன எழுத வேண்டும் என்பது வெளிப்பட்டது. இதுவே நற்செய்தியில் நமக்கு காட்டப்பட்டவை அனைத்தும் உண்மை என்ற நம்பிக்கையை அளிக்கிறது.*



**இயேசு அவர்களுக்கு உறுதியளிக்கிறார்:**

- அவர் போக வேண்டியது அவசியம்
- அவரது இரண்டாம் வருகை உறுதியானாது மற்றும்
- ஆயத்தப்படும் இந்த ஸ்தலங்களில் நித்தியமான ஐக்கியம் இருக்கும்.




### இயேசுவின் மரணத்திற்கு முன் பரிசுத்த ஆவி ஏன் வரலில்லை? வல்லமையும் செல்வாக்கும் அவர் உயிருடன் இருக்கையில் ஏன் கொடுக்கப்படவில்லை?




ஏனெனில் மீட்கும் பொருள் செலுத்தப் படவில்லை. ஆதாமுக்காக இயேசு தன் உயிரை தியாகம் செய்ய வேண்டியிருந்தது. இயேசுவை பின்பற்றுபவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றதன் நோக்கம் அவர்கள் ஒப்புரவாக்குதலின் ஊழியர்களாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் - உயிர்த்தெழுதலுக்கு பிறகு மனுகுலத்தை தேவனோடு ஒப்புரவாக்குவதில் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்பதற்காகவே. ஆதாமுக்கான மீட்கும் தொகை செலுத்தப்படாமல் ஒப்புரவாகுதல் செய்ய முடியாது. மீட்கும் பொருள் இல்லையெனில், பிறகு ஒப்புரவாகுதலும் இல்லை. ஒப்புரவாகுதல் இல்லையெனில், பிறகு பரிசுத்த ஆவியும் இல்லை.

## 8. ஆயத்தத்திற்கான கருப்பொருள்:- இயேசுவின் சமாதானம்

அடுத்ததாக, அவர்கள் வேறு எங்கும் அடைய முடியாத ஒரு வகையான சமாதானத்தை இயேசு அவர்களுக்கு அறிமுகப்படுத்துகிறார்:

***யோவான் 14:27-31 : (27)சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.***

*இந்த சமாதானத்தின் மரபு இன்றுவரை இயேசுவின் சீஷர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இது நம்முடைய சிறந்த ஆவிக்குரிய சந்ததியை சேர்ந்தது, வேறு எந்த வழியிலும் கிடைக்கபெறாதது. இது நம்முடைய நிலையான உறுதி, என்ன நடந்தாலும் சரி, "எல்லாம் நன்மைகாக" ஏனென்றால் நம்முடைய வாழ்க்கை தேவனுடைய சிறந்த பாதுகாப்பின் கீழ் உள்ளது.*



*தம்முடைய விசுவாசப் பயணம் என்ன கொண்டுவரும் என்பதை பற்றி இயேசு இப்பொழுது மெதுவாக அவர்களுக்கு நினையூட்டுகிறார்;*

***28. நான் போவேன் என்றும், திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே. நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேனென்று நான் சொன்னதைக்குறித்துச் சந்தோஷப்படுவீர்கள், ஏனெனில் என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்.***

*இயேசு போனால் சீஷர்கள் எப்படி சந்தோஷப்படுவார்கள்? மேசியாவைப்பற்றிய அவர்களின் எதிர்பார்ப்புகள் இயேசு அவர்களுக்குச் சொல்வதோடு ஒத்துப்போவதில்லை. அவர்கள் எதிர் பார்த்தது போல் இல்லாவிட்டாலும், இது நித்தியத்திற்குமான திட்டம் என்பதால்*

*அவர்களின் எதிர்ப்பார்ப்புகளை விட இது சிறந்தது என்று இயேசு அவர்களுக்கு உறுதியளிக்கிறார்.*

*தேவனுடைய கிருபையினால் இவைகள் நடப்பதற்கு முன்னரே இயேசு அவர்களிடம் இவைகளை சொல்கிறார். ஏனெனில் வரவிருக்கும் கொந்தளிப்பில் அவர்களின் விசுவாசம் பெலப்படுவதற்காக அவர்களுக்கு நினைபூட்டுகிறார்:*

***29.** **இது நடக்கும்போது நீங்கள் விசுவாசிக்கும்படியாக, நடப்பதற்குமுன்னமே இதை உங்களுக்குச் சொன்னேன். *30.* இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை. *31.* நான் பிதாவில் அன்பாயிருக்கிறேனென்றும், பிதா எனக்கு, கட்டளையிட்டபடியே செய்கிறேன் என்றும், உலகம் அறியும்படிக்கு இப்படி நடக்கும். எழுந்திருங்கள், இவ்விடம்விட்டுப் போவோம் வாருங்கள் என்றார்.***

*இந்த உலகத்தின் அதிபதி வருகிறான் - யூதாஸ் சாத்தானின் துரோக சுமையை வழங்குகிறான் ஆனால் நாம் காண்கையில் சாத்தான் பிதாவுக்கு துரோகம் இழைத்து, தன்னுடைய திட்டத்தை மேம்படுத்த முயற்சிக்கிறான்.*

*இது எல்லாம் சாத்தியமே! ஏனென்றால் இயேசு பிதா தனக்கு கட்டளையிட்ட அனைத்தையும் சரியாக செய்கிறார். விசுவாசமானது இப்படியாகவே காணப்படும்.*

*இயேசு தம்மை காட்டிக் கொடுத்தவனை கையாண்ட பின்னர், அவரிடம் மிகவும் பொருத்தமாக வெளிப்பட்ட கனிவான அக்கறையை காண்பதற்கு ஆச்சரியமாக உள்ளது.*



**இயேசுவின் சமாதானம்:-**

- *தனித்துவமானது*
- *மாற்றங்கள் மற்றும் அமைதியின்மையின் போது நிலைத்தன்மை வாய்ந்தது*
- *தேவனுடைய பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டது*
- *சாத்தனால் குழப்பமடையமாட்டாது.*

***தேவனோடு தனக்குள்ள தொடர்பை இயேசு நமக்கு உறுதியளித்துள்ளார். இந்த முழு விஷயத்திலும் நம்முடைய தொடர்பை அவர் எவ்வாறு விளக்குகிறார்?***

*அவர் சென்றவுடன் அவருடைய சீஷர்களுக்கு தேவனுடைய திட்டம் எவ்வாறு செயல்படும் என்பதை வெளிப்படுத்தும் போது இயேசு முறையானவராக இருந்தார். ஊக்கத்தின் அடுத்த பகுதி, இயேசுவின் சீஷர்கள் எவ்வாறு அவர் மூலமாக தேவனுடன் உள்ளார்ந்த முறையில் இணைக்கப்பட்டுள்ளனர் என்பதற்கான வேதாகமம் முழுவதிலும் மிகவும் நெகிழ்ச்சியான விளக்கம்.*

## *9. ஆயத்தத்திற்கான கருப்பொருள்:- அனைத்து உண்மையான சீஷர்களையும், தேவனோடும் இயேசுவோடும் இணைத்தல்.*

***யோவான் 15 : 1-2,4-5,7-8:** 1. **நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர்.** 2. **என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக்***

***கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். 4. என்னில்***
***நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்;***
***கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது***
***தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில்***
***நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். 5. நானே***
***திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான்***
***அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக்***
***கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும்***
***செய்யக்கூடாது. 7. நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும்***
***நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது***
***உங்களுக்குச் செய்யப்படும். 8. நீங்கள் மிகுந்த கனிகளைக்***
***கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும்***
***சீஷராயிருப்பீர்கள்.***

---

***யோவான் 15:2 என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்;***

***அறுத்துப்போடுகிறார்: ஸ்ட்ராங்ஸ் # 142 - எடுத்துக்கொள் (அ) செல்***

***1) உயர்த்த, உயர்த்தி மேலே***

***1a) தரையில் இருந்து உயர்த்தி, எடுத்துக்கொள்: கற்கள்.***

***1b) மேல்நோக்கி உயர்த்த, கையை: மேலே உயர்த்தி***

***1c) வரைவதற்கு : ஒரு மீன்.***

***2) தன் சுயத்தை எடுத்துக்கொண்டு, உயர்த்தப் பட்டதை சுமக்க, தாங்க***

***3) உயர்ந்தப்பட்டதைத் தாங்கி, எடுத்துச் செல்ல***

*இந்த வார்த்தை பொருள்ப்படுத்துவது **"எடுத்துக்கொள்"** அல்லது **"எடுத்துப்போடு/எடுத்து செல்"***

***மத்தேயு - 11:29 நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்குகிறேன், என் நுகத்தை உங்கள் மேல் <u>ஏற்றுக்கொண்டு</u>***

***<Strong # 142>*, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.**

***மாற்கு - 8:34 பின்பு, அவர் ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் தம்மிடத்தில் அழைத்து, ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு <Strong # 142> என்னை பின்பற்றக்கடவன்.***

*"புதிய கிளைகள் ஒரு இயற்கையான போக்கை கொண்டிருக்கின்றன, அவை கீழ்நோக்கி சென்று தரையில் படர்ந்து வளரும். ஆனால் அவை அங்கே பலன் (கனி) தருவதில்லை. கிளைகள் தரையில் படர்ந்து வளர்கையில் அதின் இலைகள் தூசியால் பூசப்பட்டிருக்கும். மழை பொழியும் போது அவை சேறு பூசப்பட்டு, பின்பு காளான் பூஞ்சை பிடித்து விடும். இதினால் அந்த கிளைகள் நோயுற்று மேலும் பயனற்று போய்விடும்.*

*....துண்டிக்கப்பட இது மிகவும் மதிப்புமிக்க கிளைகள். நாங்கள் வாலியில் தண்ணீர் எடுத்துக் கொண்டு இப்படிப்பட்ட கிளைகளை தேடி திராட்சத்தோட்டத்தின் நடுவே செல்வோம்.*

*நாங்கள் அவைகளை உயர்த்தி, கழுவி, சுத்தம் செய்து, குறுக்கு நெடுக்காக அடிக்கப்பட்ட தட்டியை சுற்றி அவைகளை மடக்குவோம். மிக விரைவில் அவை செழித்து வளரும்."*

***- ஆதாரம்: கொடியின் இரகசியங்கள், புரூஸ் வில்கின்சன். [The secrets of the vine", page 34, Bruce Wilkinson]***

---

*ஆகவே நாம் இயேசுவில் இருந்து, கனிகொடுக்க தவறினால், நாம் சேற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட வேண்டும், நம்முடைய வளர்ச்சிக்காக சுத்தமாக்கப்பட்ட பின்*

இடமாற்றம் செய்யப்பட வேண்டும். சுருக்கமாக சொன்னால், அன்பான தோட்டக்காரரின் கையில் நாம் ஒழுங்குப்படவேண்டும்.

இயேசுவின் உண்மைத்தன்மையே பிதாவுடன் இந்த நெருங்கிய தொடர்பை சாத்தியமாக்கியது. இந்த கொடியானது கிறிஸ்துவம் எவ்வாறு செயல்படவேண்டும் என்பதற்கான படம்.

- அவருடைய விசுவாசத்தில் நிலைத்திருப்பதே நாம் பலன் கொடுப்பதற்கான வழி.
- அவருடைய வார்த்தைகள் நம்மில் நிலைத்திருக்கும் போது வாய்ப்புகள் திறக்கப்படும்.
- இவை அனைத்தும் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு மகிமை சேர்க்கின்றன.

தோட்டக்காரர்/ கொடிகள்/ கிளைகள்/ பழங்கள் இவைகளின் படம் தேவன்/ இயேசு மற்றும் சீஷர்கள்; இவர்கள் ஒருவரோடொருவர் உள்ள தொடர்பை நாம் புரிந்துக்கொள்ள உதவுகின்றது.

இயேசு சிலுவையில் அறையப்பட இருக்கிறார் மற்றும் அவருடைய தோழர்கள் அதிர்ச்சியடைவார்கள். அவர்களுடைய கிறிஸ்துவ பயணத்தில் அவர்கள் என்னென்ன நினைவில் கொள்வார்கள் என்பதைக் கொண்டு, அவர் அவர்களை தயார்ப்படுத்துகிறார்.

## *10. ஆயத்தத்திற்கான கருப்பொருள்:-*
## *அன்பு கூறுதல் மற்றும் கீழ்ப்படிதலின் மூலம் வரும் மகிழ்ச்சி*

***யோவான் 15:9-11 : பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள். என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.***

*தேவனுக்கும் இயேசுவுக்கும் இடையே உள்ள தொடர்புதான் நம்முடைய கீழ்ப்படிதலுக்கான அடிப்படை. இந்த உறவுதான் இயேசுவுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. மேலும் அவருடைய மகிழ்ச்சியை நம்முடன் பகிர்ந்துக்கொள்ள அவர் விரும்புகிறார். உலகம் பொதுவாக இந்த வகையான மகிழ்ச்சியை அறியவில்லை. அவருடைய விசேஷமான சமாதானத்தைப் போலவே, இது கிறிஸ்துவின் மூலம் தேவனில் மட்டுமே காணப்படுகிறது.*

*என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள் - நாம் எங்காவது நிலைத்திருந்தால்/தங்கினால், அது நம்முடைய முகவரி/விலாசம், நாம் இங்குதான் வாழ்கிறோம் என்று பொருள். நாம் நிலைத்திருந்தால், கனிகளை கொடுக்க வேண்டும், நாம் இணைக்கப் பட்டுள்ளோம். நம்மை சுத்திகரித்து சீர்படுத்தி நாம் வளர்வதற்கான தனிப்பட்ட கவனத்தை தோட்டக்காரர் (சர்வவல்லமையுள்ள தேவன்) கொடுக்கிறார்.*

## *11. ஆயத்தத்திற்கான கருப்பொருள்:- ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்*

***யோவான் 15 : 12-17: நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே***

***என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள். இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன். நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன்.***



***நாம் எப்படி ஒருவரிலொருவர் அன்பாயிருப்பது? இயேசு நம்மில் அன்புகூர்ந்தது போலவே!***

***நம் "வேலையின் தன்மையானது" கனிக் கொடுக்கக் கூடியவராக இருப்பது!***

*கனிக்கொடுப்பதில் ஒரு பகுதி ஒருவரிலொருவர் அன்பாயிருப்பது, இயேசு நம்மில் அன்பு கூர்ந்தது போலவே. ஏன் ஒருவரிலொருவர் அன்புகூற நீண்ட நேரம்/காலம் தேவைப்படுகிறது? இந்த முறையை இயேசு தம்முடைய அப்போஸ்தலரின் பாதங்களைக் கழுவி, பணிவுடன் ஊழியம் செய்வதிலிருந்து தொடங்கினார். பின்னர் அவர் ஊழியம், துரோகம் இழைப்பவர், சத்தியத்தை அறிவது, பரலோக வாசஸ்தலங்கள், அவருயை சமாதானம், சோதனைகள்,*

தோற்றரவாளன், திராட்சை கொடி , கிளைகள் மற்றும் திராட்சை தோட்டக்காரர் படம் மூலம் அவர்களை நடத்தினார். இவை அனைத்தும் ஒருவரிலொருவர் அன்பாயிருப்பதற்கு நம்மை கொண்டுவருகிறது. ***ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால் என் சிநேகிதராயிருப்பீர்கள்.***

## *12. ஆயத்தத்திற்கான கருப்பொருள்:- வரவிருக்கும் துன்புறுத்தல்கள்.*

***யோவான் 15:18-21: உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராத-படியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது. ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள். அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால் என் நாமத்தினிமித்தமே இவைகளையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள்.***

*துன்புறுத்தல்கள் வரும்போது தப்பித்துக்கொள்ள வழியே இருக்காது. இத்தகைய சிரமத்தின் மத்தியில் உண்மையுடன் இருப்பதற்கு தேவையான அனைத்து கருவிகளையும் கொடுத்த பின்னர், துன்புறுத்தல்களை பற்றி இயேசு தம்முடைய சீஷர்களுக்கு அறிவித்தார். ஒருவரிலொருவர் அன்பாய் இருக்கும்*

*இடத்தில்தான் துன்புறுத்தல்களை தாங்கிக்கொள்ள முடியும். மேலும் நாம் நம்மை விசுவாசத்தின் ஒற்றுமையினால் ஒன்றாக இணைக்கவும் முடியும்.*

## *13. ஆயத்தத்திற்கான கருப்பொருள்:- சத்திய ஆவியைப் புரிந்துகொள்வது*

***யோவான் 15:26,27 : பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சிகொடுப்பார். நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.***

*இப்போது, யோவான் 14:16,17ல் 'சத்திய ஆவியாக' அறிமுகப்படுத்தப்பட்ட "தேற்றரவாளன்" விளக்கப்பட்டுள்ளது. தேவனுடைய ஆவியின் செயல்பாடு, இயேசுவின் வாழ்க்கையை பற்றியும் முழு சுவிசேஷத்தின் நற்செய்தியை பற்றியும் உண்மையாக சாட்சிக் கொடுக்க அவருடைய சிஷர்களுக்கு உதவியது.*




### *தேவனுடைய ஆவி அவருடைய வல்லமை மற்றும் செல்வாக்கு எனில் அது எப்படி "சாட்சியிடும்"?*




*பெந்தெகொஸ்தே நாளில் (அப்போஸ்தலர் 2) பேதுரு பரிசுத்தாவியை பெற்றபோது, ஆவி பேதுரு மூலமாக பேசியது இது வேறொரு சத்தமல்ல, அது அதன் செல்வாக்கை செலுத்துவதன் மூலம் மனுஷர்கள் மூலமாக பேசுகிறது.*

*இந்த ஆவி ஆறுதலை மட்டுமல்ல, சுவிசேஷத்தை*

*அறியவும் பிரிசங்கிக்கவும் தேவையான சத்தியத்தையும் மற்றும் அறிவின் ஆழத்தையும் தருகிறது. அப்போஸ்தலர்கள் உண்மையான சுவிசேஷத்தை உலகம் முழுக்கக் கொண்டு செல்வார்கள் என்றும் அவ்வாறு செய்வதற்கு அவர்கள் முழுமையாக ஆயத்தமாக இருப்பதையும் இயேசு உறுதி செய்தார். தேவனோடு இணைந்திருக்கக்கூடிய பெலனும் பாக்கியமும் துன்புறுத்தல்களை கையாளும் திறனை இயேசுவின் மூலம் அளிக்கிறது. என்னே அற்புதம்!*

**இயேசுவிற்கு தம்முடைய சீஷர்களுடனான நேரம் குறைந்துக் கொண்டே வருகிறது. கற்றுக்கொடுத்தலின் இறுதி நேரத்தை அவர் எப்படி நிறைவு செய்தார்?**

*இயேசு அவர்களை முடிந்தவரை ஆயத்தமான மனநிலைக்கு கொண்டு வருவார் என்று நாம் எதிர்ப்பார்க்கிறோம். இன்னும் சில மணிநேரங்களில் சீஷர்களின் வாழ்க்கை தலைகீழாக மாறி அவர்களின் எதிர்ப்பார்ப்புகள் எல்லாம் சிதைந்துவிடும். அவர்கள் அனைவரும் தற்காலிகமாக தளர்ந்து போவார்கள் என்று இயேசு அறிந்திருந்தார். மேலும் அவர்கள் மீண்டு வருவார்கள் என்றும் செழித்து வளருவார்கள் என்றும் அவர் அறிந்திருந்தார். அவர்கள் விழுவார்கள் என்று அறிந்தும் இயேசு இந்த எல்லா தகவல்களையும், ஊக்கத்தையும், வழிகாட்டுதல்களையும் கொடுத்தார்.*

## *14. ஆயத்தத்திற்கான கருப்பொருள்:- மோசமான உண்மை வருகிறதாயிருக்கிறது.*

***யோவான் 16:1-2 : நீங்கள் இடறலடையாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.அவர்கள் உங்களை ஜெபஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களைக் கொலைசெய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டு செய்கிறவனென்று நினைக்குங் காலம் வரும்.***

*இயேசு இங்கே எந்தவொரு தாக்குதல்களையும் இழுத்துக்கொள்ளவில்லை! தர்சு பட்டணத்தானாகிய சவுலை பற்றி நினைவில் இருக்கிறதா? கிறிஸ்துவர்களை துன்புறுத்தவும், கொல்லவும் வேட்டையாடிய பல பரிசேயர்களில் இவரும் ஒருவர் ஏனென்றால் அவர் இப்படியாக தேவனுக்கு ஊழியம் செய்வதாக நினைத்தார்.*

## *15. ஆயத்தத்திற்கான கருப்பொருள்:- கஷ்டம் மற்றும் இழப்பு அதிகபடியான பெலனையும் திறனையும் கொண்டுவரும்.*

***யோவான் 16:5-7 : இப்பொழுது நான் என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்; எங்கே போகிறீரென்று உங்களில் ஒருவனும் என்னைக் கேட்கவில்லை. ஆனாலும் நான் இவைகளை உங்களுக்குச் சொன்னதினால் உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது. நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்.***

*வேறு வார்த்தைகளில் கூறுகையில் : வரவிருக்கின்ற அனைத்தையும் எதிர்க்கொள்ள நான் போக வேண்டும். நான் போவதினால் ஆவி உங்களிடத்தில் கொடுக்கப்படும். நான் போக வில்லையெனில் ஆவி வராது ஏனெனில் நான் அதற்குரிய விலையை செலுத்தவேண்டும், என் பிதா என்னை மரணத்திலிருந்து எழுப்பின பிற்பாடு, நான் உங்களுக்காக பரிந்து பேசுவேன். அதன் பிறகு ஆவி உங்களிடத்திற்கு வரும்.*

*தம்முடைய சீஷர்கள் கேள்விகள் கேட்காமல் இருப்பதையும், என்ன நடக்கிறது என்று அறியாமல்*

*இருப்பதையும் இயேசு கவனித்தார். அவர்களின் இருதயத்தில் பெருகிய துக்கத்தை அவர் பார்த்தார். இதற்கான அவருடைய பதில் சற்றும் குறைவானதாக இருக்கவில்லை, "ஓ, கவலைப்படாதிருங்கள்?" அதற்கு பதிலாக, நடப்பவை அனைத்தும் அவர்கள் நினைத்து பார்க்கமுடியாத அளவிற்கு! அவர்களை பலமுள்ளவர்களாகவும் சிறந்த திறனுடையவர்களாகவும் மாற்றும் என்ற சக்திவாய்ந்த*



*உறுதியினை அவர் அளிக்கிறார். ஆனால் இப்படியான திறன். இயேசு அவர்களுடன் இல்லாமல் போகும் போதுதான் வரும், அது அவர்களுக்கு பழக்கமில்லாத ஒன்றாயிருந்தது.*

***16. ஆயத்தத்திற்கான கருப்பொருள்:-***
**நீங்கள் ஆரம்பத்தில் இருக்கிறீர்கள் என்பதை உணர்ந்து பொறுமையாயிருங்கள் மற்றும் ஏற்ற நேரத்தில் நீங்கள் புரிந்துக்கொள்வீர்கள்.**

***யோவான் 16:12-15 : இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர்***

***வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்.***

*மாபெரும் செய்தியை இயேசு வெளிப்படுத்துகிறார். தேவனுடைய ஆவி அவர்களுக்குள் கிரியை செய்ய ஆரம்பித்தவுடன், அது இயேசுவின் போதனைகள் அனைத்திற்கும் ஆழமான அர்த்தத்தை தரும். இயேசுவின் உவமைகளை நினைவில் கொள்ளவும், மேலும் புரிந்துக்கொள்ளும் திறனையும் அவர்கள் பெற்றிருப்பார்கள். அதாவது தேவனுடைய தெய்வீகத்திட்டம் அவர்களுக்கு தெளிவாக புரியும்! அவர்கள் கிறிஸ்துவத்தின் அஸ்திபாரமாக இருக்க போகிறவர்கள். எதிர்கால இராஜ்யத்தின் உயிர்த்தெழுந்த உலகம் அனைத்தையும் மீண்டும் தேவனுடன் ஒப்புரவாகுதலின் ஊழியத்தின் வளர்ச்சிக்காக இயேசு அவர்களை தயார்ப்படுத்தினார்.*

## *17. ஆயத்தத்திற்கான கருப்பொருள்:-*
## ***வலி மற்றும் பாடுகள் மூலம் புதுஜீவன் வருகிறது. சோதனைக்கு பிறகு மாபெரும் மகிழ்ச்சி.***

***யோவான் 16:20-22 : மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும்; நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். ஸ்திரீயானவளுக்குப் பிரசவகாலம் வந்திருக்கும்போது அவள்***

***துக்கமடைகிறாள்; பிள்ளைபெற்றவுடனே ஒரு மனுஷன் உலகத்தில் பிறந்தானென்கிற சந்தோஷத்தினால் அப்புறம் உபத்திரவத்தை நினையாள். அதுபோல நீங்களும் இப்பொழுது துக்கமடைந்திருக்கிறீர்கள். நான் மறுபடியும் உங்களைக் காண்பேன், அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்படும், உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப்போடமாட்டான்.***

*அவர்களுடைய மகிழ்ச்சியை அவர்களிடமிருந்து பறிக்கமுடியாது. மகிழ்ச்சியுடன் வாழ்வது ஒரு உணர்வல்ல, மாறாக அது நம் வாழ்க்கையை அணுகும் விதம். இது தேவனுடைய பாதுகாப்பு என்கிற கண்ணாடி மூலம் பார்க்கும் நம்முடைய தேர்ந்தெடுத்தல்.*

*இயேசு மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார் மற்றும் மகிழ்ச்சியுடன் இறந்தார்:*

***எபிரெயர் - 12:2 : அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்.***



*அவர்களுக்கு வரவிருக்கும் பாடுகளை வெளிபடுத்தி திரும்ப திரும்ப எடுத்துரைக்கும் முறையை இயேசு கையாண்டார் மேலும் பாடுகளை தொடர்ந்து ஆசீர்வாதம் வருகிறது என்பதையும் அவர்களுக்கு நினைவுப்படுத்தினார்.*

*அவர் உண்மையுள்ளவராக இருப்பதாலும், அவர்கள் அவரை பின்பற்றுவதாலும்! சோதனைகளும் உபத்திரவங்களும் எப்போதும் ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும் என்பதை அறிந்துக்கொள்ள அவர் அவர்களுக்கு கற்பிக்கிறார்.*




*தேவனுடைய பராமரிப்பையும், மேற்பார்வையும் நாம் காண்பதினால் மகிழ்ச்சி உண்டாகிறது. நிலையாக நம்பினவைகள் நீங்கினாலும் நாம் மகிழ்ச்சியாக இருக்க முடியும்.*

## *18. ஆயத்தத்திற்கான கருப்பொருள்:-*
## *மிக முக்கியமான உண்மைகளின் எளிமையை நினைவில் கொள்ளுங்கள்!*

***யோவான் 16:27-28 : நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேனென்று விசுவாசிக்கிறபடியினால் பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிறார். நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன்; மறுபடியும் உலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்றார்.***

*எளிமையாக மீண்டும் கூறப்பட்டது : நீங்கள் என்னை சிநேகித்து நான் அவருடைய குமாரன் என்று விசுவாசிக்கிறபடியினால் பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிறார். நான் புறப்பட்டு உலகத்திற்கு வந்தேன், அவருடைய சித்தம் செய்தேன் விலைகிரயம் செலுத்தினேன் இப்போது மறுபடியும் அவரிடத்திற்கு போகிறேன். முன்னோக்கி செல்லும் பாதை எளிமையானது அல்ல என்பதை புரிந்துக்கொள்ள இது அவர்களுக்கு உதவியது. ஆனால் காரியத்தின் மிக முக்கியமான உண்மைகள் இதில் அடங்கியுள்ளது.*

## *19. ஆயத்தத்திற்கான கருப்பொருள்:-*
## **தேவனுடைய மகிமையான திட்டத்தை எதுவும் தடுக்க முடியாது என்று விசுவாசியுங்கள் உள்ளான சமாதானம் விசுவாசத்தினாலே வருகிறது.**

***யோவான் 16:32-33 : இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார். என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்.***

*இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு தம் சீஷர்களுக்கு இடைவிடாமல் போதித்த இறுதி போதனையான வார்த்தைகள் இவை. இதற்கு பிறகு, அவர்கள் இயேசுவை அழைத்துச் செல்லப்படும் கெத்செமனே தோட்டத்திற்குச் செல்லப்போகிறார்கள். இதுவே அவரது இறுதி விடைபெறுதல்.*

இயேசு அவர்களுடன் விட்டுச் செல்லக்கூடிய மிகவும் சக்திவாய்ந்த மற்றும் நேர்மறையான வார்த்தையை அவர்களுக்கு விட்டுச்செல்கிறார்:

**நான் உலகத்தை ஜெயித்தேன் -**

அவர் மீண்டும் காரியங்களை ஒழுங்குப்படுத்தினார்.

யோவான் 13-ல் இந்த போதனைகள் தொடங்கியபோது இயேசுவின் உறுதியினைப் பற்றி அப்போஸ்தலனாகிய யோவான் சரியாக இந்த வார்த்தைகளைக் கொண்டே விவரித்துள்ளார். இயேசு உலகத்தை ஜெயித்தார் என்ற செய்தி மிகவும் தெளிவாக உள்ளது. அடுத்து வரப்போவது, உலகம் எப்போதும் காணக்கூடிய உறுதிபடுத்தப்பட்ட கீழ்ப்படிதலின் இறுதி உதாரணம்.

ஒரு துளி கூட சந்தேகம் இல்லாமல், முன்னோக்கி செல்லும் பாதையில் முற்றிலும் உறுதியாயிருக்கும் ஒரு தலைவர் நம்மிடத்தில் இருக்கும்போது அது பெரும் ஆறுதல் அளிக்கிறது. நாம் அவரை என்றும் நம்பும் படியான எண்ணிப் பார்க்க முடியாத தலைமைதுவத்தை இயேசு காண்பித்தார்.



*இயேசு கொடுத்த விலையும் தம்மைப் பின்பற்றுபவர்களை அவர் கவனித்துக்கொண்ட விதமும் கிறிஸ்துவம் என்றால் என்ன என்பதை வெளிக்காட்டியது. நாம் அவருடைய பிரதிநிதிகளாக இருக்க வேண்டும், ஆனால் நமக்கு தேவையான அனைத்து உதவிகளையும் பெற்றுக்கொள்வோம் எப்படியெனில் அவர் உலகத்தை ஜெயித்தார். நாம் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை!!*

***ஆகையால், இயேசு எவ்வாறு தம்முடைய சீஷர்களை தனது மரணத்திற்கு ஆயத்தம் பன்னினார் ?"***

***அதைப்பற்றி சிந்தியுங்கள்!!***

***"ஒருதலைவரின் முதல் பொறுப்பு உண்மையை வரையறுப்பதாகும், கடைசியாக நன்றி சொல்ல வேண்டும். இதற்கிடையில் தலைவன் ஒரு ஊழியக்காரன்."***

***- மேக்ஸ் டீப்ரீ.***

ஆமென்!

BIBLE STUDENTS

Food for New Creature